தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
நவம்பர் 22, 2010 இதழுடன் இணைப்பு

பயர்பாக்ஸ் பிரவுசரில் கால்குலேட்டர்

பிரவுசர்களுக்கான ஷார்ட்கட் கீகள்

கூகுளின் பெரிய செய்திகளை நீக்க

வரும் 2012ல் விண்டோஸ் 8

இந்த வார டவுண்லோட்

பயர்பாக்ஸ் பிரவுசரில் கால்குலேட்டர்

நமக்கு கால்குலேட்டர் எப்போதெல்லாம் தேவைப் படும் என்று முன்கூட்டியே கணக்கிட முடியாது. எப்போது வேண்டுமானாலும் தேவைப் படலாம். இன்டர்நெட்டில் உலா வருகையில், இது தேவைப்பட்டால், பிரவுசரை மூடி, பின்னர், புரோகிராம்ஸ் சென்று, கால்குலேட்டரை இயக்க நேரம் வீணாகிவிடும். இதற்கெனவே, பயர்பாக்ஸ் பிரவுசரில், அதன் டாஸ்க் பாரில் வைத்து இயக்கும் வகையில் ஒரு கால்குலேட்டர் தரப்பட்டுள்ளது. அதுவும் ஒரு சயின்டிபிக் கால்குலேட்டராக உள்ளது என்றால், அனைவருக்கும், குறிப்பாக மாணவர் களுக்கும், இளைஞர்களுக்கும் நன்மைதானே.

இந்த பயர்பாக்ஸ் டாஸ்க்பார் சயின்டிபிக் கால்குலேட்டர் ஓர் ஆட் ஆன் தொகுப்பாக, புரோகிராமாகக் கிடைக்கிறது. இதனைப் பெற https://addons.mozilla.org/en-US/firefox/addon/6521/ என்ற முகவரிக்குச் செல்லவும். அடுத்து, அங்குள்ள "Add to Firefox" என்ற பட்டனில் கிளிக் செய்திடவும்.

உடனே "Software Installation" டயலாக் பாக்ஸ் கிடைக்கும். இதில் கிடைக்கும் "Install Now" பட்டனில் கிளிக் செய்திடவும். டாஸ்க் பார் சயின்டிபிக் கால்குலேட்டருக்கான புரோகிராம், உங்கள் பயர்பாக்ஸ் பிரவுசரில் பதியப்படும். அடுத்து "Restart Firefox" பட்டனில் கிளிக் செய்திடவும்.

இப்போது கம்ப்யூட்டர் நீங்கள் மேற்கொள்ள இருப்பதைப் புரிந்து கொண்டு, விண்டோஸ், டேப்ஸ், பிரவுசர் ஆகிய அனைத்தையும் புதிய இணைப்பு களுடன் தொடங்கும்.

பிரவுசர் மீண்டும் கிடைத்தவுடன், கால்குலேட்டர் ஐகானில் கிளிக் செய்து, டெக்ஸ்ட் ஏரியாவில் நீங்கள் என்ன கணக்குகளைப் போட விரும்புகிறீர்களோ, அவற்றை என்டர் செய்திடவும்.

இந்த கால்குலேட்டர் ஐகானில் ரைட் கிளிக் செய்து, உங்கள் எண் அடிப்படையை மாற்றிக் கொள்ளலாம்.

உள்ளே

பிரவுசர்களுக்கான ஷார்ட்கட் கீகள் — பக்கம் 3

டேப்ளட் பிசி - கவனிக்க வேண்டிய அம்சங்கள் — பக்கம் 8

கூகுளின் பெரிய செய்திகளை நீக்க — பக்கம் 12

வாசகர்களே . . .

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், 'சி.டி.'க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2010 ஏப்ரல் பிறகு உள்ள 'சிடி'க் களை மட்டும் அனுப்பவும். 'சி.டி.' யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

பிரவுசர்களுக்கான ஷார்ட்கட் கீகள்

இணையத்தில் மணிக்கணக்கில் உலா வருகையில், மவுஸைப் பிடித்து இயக்குகையில், வலது மணிக்கட்டில் வலி ஏற்படலாம். அப்போது நம்மில் பலர், ஷார்ட்கட் கீகளை நாடுவோம். நாம் மேற்கொள்ளும் அனைத்து செயல்பாடுகளுக்கும், இந்த ஷார்ட்கட் கீ தொகுப்புகள் இருந்தால் நல்லது என்று ஆசைப்படுவோம். சில வாரங்களுக்கு முன், குரோம் பிரவுசருக்கான ஷார்ட்கட் கீ தொகுப்புகள் இந்த மலரில் தரப்பட்டன. அவற்றை குரோம் தளத்திலேயே பெற விரும்புபவர்கள், http://www. google.com/support/chrome/bin/static.py?page=guide.cs&guide=25799&topic=28650 என்ற முகவரியில் உள்ள தளத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். மொஸில்லா பயர்பாக்ஸ் மற்றும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசருக்கான சில முக்கிய ஷார்ட்கட் கீ தொகுப்புகளை இங்கு காணலாம். இவை பயர்பாக்ஸ் தொகுப்பு 3 மற்றும் பின்னர் வந்த தொகுப்புகளிலும், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 7 மற்றும் 8 களிலும் பயன்படுத்தலாம்.

1. இன்டர்நெட் எக்ஸ்புளோரர்:

லேப்டாப் கம்ப்யூட்டரை பயணத்தின் போது பயன் படுத்துகிறீர்களா? குறிப்பாக ட்ரெயினில் செல்கையில் பலரும் தங்கள் தூங்கும் பலகைகளில் சாய்ந்தவாறும், அல்லது பகல்நேர தூர வண்டிகளில், இருக்கையில் அமர்ந்த வாறே பயன்படுத்துவதனைப் பார்த்திருக் கிறேன். அப்போது மவுஸ் பயன்படுத்த வேண்டும் என்றால் அடுத்தவருக்கு இடையூறு தரும் வகையில் தான் பயன்படுத்த முடியும். எனவே மவுஸினைப் பயன்படுத்த மாட்டோம். ஆனால் இணைய தளங்களில், டெக்ஸ்ட் காப்பி செய்து பேஸ்ட் செய்திட சற்று சிரமமாக இருக்கும். இங்கு தான் கேரட் பிரவுசிங் (Caret Browsing) என்பது உதவுகிறது. இதனை மேற்கொள்ள, எப்7 கீயினை அழுத்த வேண்டும். இப்போது ஒரு டயலாக் பாக்ஸ் காட்டப்பட்டு, அதில், கேரட் பிரவுசிங் வேண்டுமா என்ற கேள்வி காட்டப்படும். இதற்கு ஆம் எனப் பதில் அளித்தால், கேரட் அடையாளத்துடன் கர்சர் கிடைக்கும். இதன் மூலம் டெக்ஸ்ட்டினை எளிதாகத் தேர்ந்தெடுக்கவும், ஒட்டவும் முடியும். டேப், ஹோம், பேஜ் அப் போன்ற கீகளையும் பயன்படுத்தலாம். இது பயர்பாக்ஸ் பிரவுசரிலும் செயல்படும். ஆனால் குரோம் பிரவுசரில் செயல்படாது.

2. இணைய தளத்தின் டெக்ஸ்ட் அளவை அதிகப்படுத்தவும், சிறிதாக்கவும் ஷார்ட்கட் கீகளைப் பயன்படுத்தலாம். கண்ட்ரோல் + ப்ளஸ் கீ அழுத்தினால், டெக்ஸ்ட் பெரிதாகும்.



கண்ட்ரோல் + மைனஸ் கீ அழுத்தினால், டெக்ஸ்ட் சிறிதாகும். வழக்கமான இணைய தளம் தரும் அளவில் டெக்ஸ்ட் இருக்க வேண்டும் என்றால், கண்ட்ரோல் + பூஜ்யம் அழுத்த வேண்டும்.

3. இணையத்தில் பல வகை தேடுதல் இஞ்சின்களைப் பயன்படுத்தலாம். கண்ட்ரோல் + E அழுத்த சர்ச் இஞ்சின் கிடைக்கும். பின்னர், கண்ட்ரோல் + கீழ் அம்புக்குறி அழுத்த, தேடல் இஞ்சின்களின் பட்டியலைப் பெறலாம்.

4. ஒவ்வொரு டேப்பில் இருக்கும் தளத்தின் குறுகிய படம் (குரோம் பிரவுசரில் கிடைப்பதைப் போல)கிடைக்க வேண்டுமா? கண்ட்ரோல் + க்யூ கீ அழுத்தவும். (இந்த வசதி முதலில் சபாரி பிரவுசரில் அறிமுகப்படுத்தப்பட்டது என்று முன்பு வாசகர் ஒருவர் எழுதி இருந்தார். பிரவுசரில் வசதிகளைத் தருவதில் எந்த அளவிற்குப் போட்டி உள்ளது என்று இதன் மூலம் தெரிகிறது)

5. முன்னணியில் புதிய டேப் ஒன்றைத் திறக்க Ctrl + T அழுத்தவும்.

6.டேப்களுக்கிடையே செல்ல CTRL+TAB அல்லது CTRL+SHIFT+TAB அழுத்தலாம்.

7. அப்போதைய டேப் அல்லது விண்டோவினை மூட Ctrl + W

8. முன்னணியில் அட்ரஸ் பாரிலிருந்து புதிய டேப் திறக்க Alt+ Enter

9. குறிப்பிட்ட டேப்பிற்குச் செல்ல CTRL+ N (இங்கு N என்பது டேப்களில் எத்தனாவது டேப் என்ற எண்ணைக் குறிக்கிறது. அது 1 முதல் 8 வரையில் இருக்கலாம்.)

10. இறுதி டேப்பிற்குச் செல்ல Ctrl+ 9.

11. மற்ற டேப்களை மூட Ctrl+ Alt+F4.

2. பயர்பாக்ஸ் பிரவுசரில்:

1. உங்களுடைய பிரவுசர் ஏற்கனவே பார்த்த தளங்களுக்கு, பழைய கேஷ் மெமரியில் உள்ள தள தகவல்களைத் தருகிறதா? இதற்கும் மேலாக, இன்றைய தகவல்களைத் தர வேண்டும் என விரும்புகிறீர்களா? நீங்கள் அழுத்த வேண்டிய ஷார்ட்கட் கீகள் Ctrl +Win+F5.

2. கர்சரை அட்ரஸ் பாருக்கு இழுக்க Alt + D.

3.சர்ச் பாருக்கு கர்சரை இழுக்க Ctrl +Win+K.

4.இணையப் பக்கத்தில் டெக்ஸ்ட் ஒன்றைக் கண்டறிய / டைப் செய்து, எந்த சொல்லைத் தேடுகிறீர்களோ, அதனை டைப் செய்திடவும். நேரடியாக அது தேடும் கட்டத்திற்கு இழுத்துச் செல்லும்.

5. உங்களுடைய ஹோம் இணையப் பக்கத்தினை புதிய டேப்பில் திறக்க வேண்டுமா? Alt+Home கீகளை அழுத்தவும்.

6. ஓர் இணையப் பக்கம் பின்னால் செல்ல வேண்டுமா? பேக் ஸ்பேஸ் கீயை அழுத்தவும்.

7.உங்களுடைய பிரைவேட் டேட்டாவினை முற்றிலுமாக நீக்க வேண்டுமா? Alt+Shift+delete அழுத்தவும். (இதனை Alt+Ctrl+Delete உடன் குழப்பிக் கொள்ள வேண்டாம். அவை பழைய விண்டோஸ் சிஸ்டங்களில், சிஸ்டத்தினை ரீ பூட் செய்துவிடும்.)

8. அப்போதைய விண்டோவினை முழுத் திரையில் பார்க்க வேண்டுமா? எப்11 அழுத்தவும். மீண்டும் பழையபடி காண, அதே கீயை அழுத்தவும்.

9. லிங்க்குகளுக்கிடையே தாவிச் செல்ல, டேப் கீ அழுத்தவும். பின்பக்கமாக இவற்றிற்கிடையே செல்ல, ஷிப்ட் கீயுடன் இதனை அழுத்தவும்.

மேலே தரப்பட்டுள்ள ஷார்ட் கட் கீகளை நினைவில் வைத்துக் கொள்ள, இவற்றை அடிக்கடி பயன்படுத்துவது தான் ஒரே வழி. முடியாதவர்கள், இவற்றை ஒரு வேர்ட் பைலில் போட்டு வைத்து, எளிதாக அணுகித் திறந்து பார்க்கும் வகையில் வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

"கவனத்திற்கு"

வெப் பேஸ்டு இமெயில் என்பது ஒரு வெப் சர்வரில் உங்களுக்காக நீங்கள் அமைத்துக் கொண்ட இமெயில் வசதி ஆகும். இந்த இமெயில் கணக்கில் வரும் இமெயில்களை ஒரு வெப் பிரவுசர் துணையுடன் அந்த வெப் தளத்தில் நுழைந்து காண வேண்டும். அங்கிருந்தபடி தான் அவற்றைக் கையாள முடியும். கூகுள், விண்டோஸ் லைவ், யாஹூ ஆகியன இந்த வகையைச் சேர்ந்தவையே.

வேர்ட்
டேபிள் – சில டிப்ஸ்:

வேர்ட் டிப்ஸ்

வேர்ட் தொகுப்பில் தரப்பட்டுள்ள டேபிள் வசதி, பல வழிகளில் நமக்கு உதவிடும் ஒரு வசதி ஆகும். ஆனால், இதனைப் பயன்படுத்துபவர்களில் பலர், இதன் வசதிகள் சிலவற்றில் சிரமங்களைச் சந்தித்து, அவற்றை வேண்டாம் என நீக்கிவிடும் அளவிற்குச் செல்வார்கள். சில வழிகளைப் பின்பற்றினால், வேர்ட் டேபிள் தரும் அனைத்து வசதிகளையும் முழுமையாக அனுபவிக்கலாம்.

1. டேபிளைப் பிரிக்க: டேபிள் ஒன்றை உருவாக்கிய பின்னர், அதனை இரண்டாகப் பிரித்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணுகிறீர்கள். எப்படிப் பிரிப்பது என்று யோசிக்கிறீர்களா? எந்த படுக்கை வரிசையிலிருந்து புதிய டேபிள் தொடங்க வேண்டும் என விரும்புகிறீர்களோ, அந்த வரிசையில் கர்சரைக் கொண்டு சென்று, கிளிக் செய்திடவும். அடுத்து, டேபிள் மெனு சென்று, Split Table என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் 2007 / வேர்ட் 2010 தொகுப்புகளில், Layout (context) டேப்பில் கிளிக் செய்திடவும்.

2. தலைப்பைக் காட்ட: டேபிள் ஒன்று ஒரு பக்கத்திற்கு மேல், அல்லது பல பக்கங்களில் இடம் பெறுகையில், டேபிளின் முதல் படுக்கை வரிசையில் உள்ள, தலைப்புகள் மற்ற பக்கங்களிலும் இடம் பெற வேண்டும் என நீங்கள் விரும்பலாம். இதனை மேற்கொள்ள நீங்கள் செய்ய வேண்டியது: எந்த படுக்கை வரிசையில் உள்ளவை தலைப்புகளாக, ஒவ்வொரு பக்கத்திலும் இடம் பெற வேண்டுமோ, அந்த வரிசையில் கர்சரைக் கொண்டு சென்று நிறுத்தவும். பின்னர், டேபிள் மெனு சென்று, கீழ்விரியும் பட்டியலில் Heading Rows Repeat என்பதைத் தேர்ந்தெடுத்து மூடவும். வேர்ட் 2007/ வேர்ட் 2010 தொகுப்புகளில், Layout (context) tab தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடவும். பின்னர் டேட்டா குரூப்பில், Repeat Header Rows என்பதில் கிளிக் செய்திடவும்.

3. அநாதையாக ஒரு பகுதி: சில வேளைகளில், டேபிளின் ஒரு வரிசை மட்டும் அடுத்த பக்கத்திற்குச் சென்று அநாதையாக நிற்கும். இது தோன்றுவதைத் தடுக்க, ஒரு செட்டிங்ஸ்



ஏற்படுத்தலாம்.

டேபிள் மெனு சென்று, டேபிள் ப்ராப்பர்ட்டீஸ் என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இதில் உள்ள Row என்னும் டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர், Allow Row To Break Across Page என்று உள்ள இடத்தில் காட்டப்படும் டிக் அடையாளத்தை எடுத்துவிடவும்.

4.வேகமாக எண்கள் இட: டேபிளின் ஒரு நெட்டு வரிசையில் உள்ளவற்றிற்கு எண்கள் இட விரும்புவோம். அந்த நெட்டு வரிசையினைத் தேர்ந்தெடுக்கவும். Formatting டூல்பாரில் Numbering என்பதில் கிளிக் செய்திடவும். அல்லது ஹோம் டேப்பில் Numbering என்பதில் கிளிக் செய்திடவும். எண்கள் இடப்படும். ஆனால், இந்த செயல்பாடு, நீங்கள் வரிசையில் உள்ள ஐட்டங்களை, என்டர் கீ அழுத்தி அமைத்திருந்தால் தான் மேற்கொள்ளப்படும். தானாக அடுத்தடுத்து ஏற்பட்டிருந்தால், அவை அனைத்தும் ஒரே ஐட்டமாகவே கம்ப்யூட்டர் எடுத்துக் கொள்ளும்.

டேபிளில் பார்டர்களை நீக்க:

வேர்டில் டாகுமெண்ட் இடையே டேபிள் ஒன்றை உருவாக்கும்போது, வேர்ட் அந்த டேபிளில் பார்டர் கோடுகளை நீங்கள் விரும்புகிறீர்கள் என்றபடி கோடுகளை செல்களைச் சுற்றிலும் அமைத்துத் தரும். ஏதேனும் காரணத்தினால் இந்த கோடுகள் உங்களுக்குத் தேவையில்லை என்று எண்ணினால் அதனை நீக்கலாம். இதற்கான பல வழிகளில் எளிய வழி ஒன்று உள்ளது. கண்ட்ரோல் + ஆல்ட் +யு (Ctrl+Alt+U) கீகளை அழுத்தினால் பார்டர் கோடுகள் நீக்கப்படும்.

இந்த கீகளை அழுத்தும் முன் கர்சர் ஏதேனும் ஒரு செல்லில் இருக்க வேண்டும்.

டாகுமெண்ட்டில் பக்க எண் பீல்ட்:

பொதுவான □ல்டுகளை நம் டாகுமெண்ட்டில், நம் வசதிக்கென, ஆங்காங்கே அமைத்திட வேர்ட் தொகுப்பு வசதிகளைத் தந்துள்ளது. உங்கள் டாகுமெண்ட்டில், பக்க எண்ணை, ஆங்காங்கே அமைத்திட விரும்பினால் இந்த குறிப்பு உங்களுக்கு உதவும். இதன் மூலம் அமைக்கப்படும் பேஜ் □ல்ட், தானாகவே அது அமைந்துள்ள பக்க எண்ணைக் காட்டும். எடுத்துக் காட்டாக, பேஜ் □ல்ட் பக்கம் 4ல் அமைக்கப்பட்டிருந்தால், □ல்டில் 4 எனக் காட்டப் படும். பேஜ் □ல்டு அமைக்கப்பட்ட பக்கங்கள் பின்னர் மாற்றப்பட்டால், அவையும் அதற்கேற்ற வகையில் அப்டேட் ஆகும். இதனை எப்படி அமைப்பது எனப் பார்க்கலாம்.

எங்கு □ல்டு அமைக்கப்பட வேண்டுமோ, அங்கு கர்சரைக் கொண்டு செல்லவும். பின்னர், Shift+Alt+P ஆகிய கீகளை அழுத்தவும். இனி, இந்த □ல்டு தானாகவே பக்க எண் காட்டும்; அவ்வப்போது ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்கேற்ப அப்டேட் ஆகும்.

டாகுமெண்ட்டில் கிரிட் லைன்:

சிலவகை எழுத்துக்கள், படங்கள் அமைக்க, கிராப் ஷீட்டினைப் பயன்படுத்துவோம். அதன் பின்னணி யில் உள்ள கிரிட் லைனால் அமைக்கப்பட்ட சிறிய கட்டங்களால் ஆன முழுப் பக்கம், இவற்றை அமைக்க உதவும். வேர்ட் டாகுமெண்ட்டிலும் இந்த கிரிட் லைன் கட்டங்களை உருவாக்கி, நமக்குத் தேவையான சார்ட், எழுத்து, படம் போன்றவற்றை அமைக்கலாம். ஆனால், இதில் என்ன பிரச்னை என்றால், டாகுமெண்ட்டை அச்சிடுகையில், இந்த கட்டப் பின்னணி அச்சாகாது.

வேர்ட் 2007 மற்றும் வேர்ட் 2010ல் கீழ்க்குறிப்பிட்டபடி செயல்பட்டு இந்த கிரிட் லைன் கட்டத்தினை அமைக்கலாம்.

1. Page Layout டேப்பில் கிளிக் செய்திடவும்.
2. Arrange group பிரிவில், Align ட்ராப் டவுண் லிஸ்ட் மீது கிளிக் செய்திடவும்.
3. View Gridlines என்பதில் செக் செய்திடவும். இந்த டிக் அடையாளத்தை எடுத்துவிட்டால், கிரிட்லைன்கள் நீக்கப்படும்.

கிரிட்லைன்களை எப்படி நம் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது? Align ட்ராப் டவுண் லிஸ்ட்டில் Grid Settings என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இதில், கிரிட் கட்டம், அதில் உள்ள ஆப்ஜெக்ட், கிரிட் லைன் அளவு என இன்னும் பலவற்றை மாற்றி அமைக்க ஆப்ஷன்ஸ் கிடைக்கும். இதில் மிகவும் பயனுள்ளதாக நான் பார்த்தது Use Margins ஆப்ஷன் தான். இது Grid Options பிரிவில் கிடைக்கிறது. இதனை வேண்டாம் என டிக் அடையாளத்தினை எடுத்துவிட்டால்,

வேர்ட் கிரிட் கட்டத்தை மார்ஜின் வரை நீட்டிக்கும்.

வேர்ட் 2003 தொகுப்பில் எப்படி இதனை அமைப்பது எனப் பார்க்கலாம்.

1.ட்ராயிங் டூல் பாரில் (Drawing toolbar) Draw என்பதில் கிளிக் செய்திடவும்.

2. அடுத்து, Grid என்பதில் கிளிக் செய்திடவும்.

3. பின்னர், Display Gridlines என்பதில் செக் செய்திடவும்.

முன்பே குறிப்பிட்டபடி, இந்த கட்டத்தினை அச்சில் கொள்ள வழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஐகான் பட்டன்கள் எதற்காக?

வேர்டில் மெனு பாரினை ஒட்டி நிறைய பட்டன்கள் உள்ளன. இந்த பட்டன்களின் பெயர்கள் என்னவென்று தெரியவில்லை. சிறிய ஐகான்களாகத் தோற்றமளிக்கின்றன. பெயர் தெரிய வேண்டுமா? உடனே மவுஸின் கர்சரை இந்த பட்டன் அருகே கொண்டு செல்லுங்கள். உடனே அந்த பட்டனின் பெயர் தெரியும்.

மார்ஜின் மாற்ற:

டாகுமெண்ட் அமைக்க காலி பக்கம் ஒன்றைத் திறந்தவுடன் அதில் தரப்பட்டிருக்கும் மார்ஜின் உங்களுக்குப் பிடிக்கவில்லையா? அதனை மாற்றி அமைக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் File மெனுவில் Page Setup செல்லவும். அங்கு Margins டேப்பில் கிளிக் செய்திடவும். கிடைக்கும் விண்டோவில் மார்ஜின் வெளியைக் கூட்டவும் குறைக்கவும் வசதிகள் தரப்பட்டிருக்கும். மாற்றிக் கொள்ளலாம். காலியாக இருக்கும்போதுதான் மாற்ற வேண்டும் என்பதில்லை. டாகுமெண்ட் உருவான பின்னும் மேலே சொன்ன வழியில் மாற்றலாம். மாற்றுவதற்கேற்ப உங்கள் டாகுமெண்ட் தோற்றமும் மாறும்.

வரும் 2012ல் விண்டோஸ் 8

விண்டோஸ் 7 ஆப்பரேட்டிங் சிஸ்டம் இப்போது மக்களிடையே பரவலாகி, அதனுடன் பழகி இயங்கத் தொடங்கி விட்டோம். இந்நிலையில் விண்டோஸ் 8 என்னும் அடுத்த இயக்கத் தொகுப்பு குறித்த குறிப்புகள் வரத் தொடங்கிவிட்டன. வரும் 2012 ஆம் ஆண்டில் இந்த தொகுப்பு வெளியிடப்படலாம் என உத்தேசமாகக் குறிப்புகள் கிடைத்துள்ளன.

இதுவரை வெளியான இயக்கத் தொகுப்புகளில், மிக வேகமாக விற்பனையாகும் தொகுப்பு என்ற பெயரைப் பெற்ற விண்டோஸ் 7 தொகுப்பு வெளியாகி ஓராண்டு ஆனதற்கான வெற்றி குறித்து தகவல் தருகையில், விண்டோஸ் 8 குறித்த தகவலும் வெளியாகி உள்ளது. http://www.winrumors.com/microsoft-windows-8-about-two-years-away/ என்ற தளத்தில் இந்த செய்தி காணப்பட்டது. ஆனால் சில நாட்களில் இந்த செய்தி தளத்தில் இருந்து எடுக்கப்பட்டது. மேற்கொண்டு எந்த செய்தியையும் மைக்ரோசாப்ட் வெளியிடவில்லை.

தன் ஆப்பரேட்டிங் சிஸ்டம் வரிசையில், 128 பிட் அமைப்பில் இயங்கும் சிஸ்டம் ஒன்றைத் தயாரித்து வருவதாகப் பல நாட்களுக்கு முன்பே பேசப்பட்டது. அநேகமாக, இதுவே விண்டோஸ் 8 ஆக இருக்கலாம்.

இதற்கிடையே ஆப்பிள் நிறுவனம் தன் ஓ.எஸ். எக்ஸ் மற்றும் மொபைல் ஐ.ஓ.எஸ். ஆகியவற்றை இணைத்து ஒரே ஆப்பரேட்டிங் சிஸ்டமாக ஒன்றைத் தர இருப்பதாகவும் செய்திகள் கிடைத்தன. இதனைக் கேள்விப்பட்ட மைக்ரோசாப்ட், நிச்சயமாய் அதனை உணர்ந்து, வரப்போகும் தன் அடுத்த சிஸ்டத்தையும் அதற்கேற்ற வகையில் தயாரிக்க விரும்பலாம்.

winrumors Home About Contact

Microsoft: Windows 8 about two years away

Tom Warren

24th Oct 10 4:00 pm, 3 Comments

Like 13 Tweet 23

Microsoft has been extremely tight lipped about Windows 8 availability but a posting on Microsoft's dutch news site hints at a two year wait for the next version of Windows.

'Furthermore, Microsoft is on course for the next version of Windows. But it will take about two years before "Windows 8 'on the market," said a posting celebrating the first birthday of Windows 7. This confirms that the software giant isn't planning to rush the next version of Windows out of the door. Microsoft CEO, Steve Ballmer, recently admitted that the next version of Windows will be the software giants riskiest product yet.

Tags: release, rtm, windows, windows 8

About Tom Warren

Tom is a veteran Neowin reporter, having reported mainly Microsoft news for 5 years. Tom has broken many Microsoft stories including the infamous Windows 2000 source code leak in 2004 and the Hotmail password leak in 2009.

View all posts by Tom Warren »

டேப்ளட் பிசி – கவனிக்க வேண்டிய அம்சங்கள்

அடுத்த சில மாதங்களில், குறிப்பாக புத்தாண்டான 2011ல், டேப்ளட் பிசிக்கள் பல மக்கள் வாங்கும் விலையில் வர இருக்கின்றன. மக்கள் கம்ப்யூட்டர் வாங்குவதை விட்டுவிட்டு, டேப்ளட் பிசிக்களை நாட இருக்கின்றனர். பல வசதிகள், தனி நபர் விருப்பங்கள், இயக்க, எடுத்துச் செல்ல எளிது எனப் பல புதிய சிறப்புகளில் டேப்ளட் பிசி, தற்போதைய டிஜிட்டல் உலகில் இடம் பிடித்துள்ளது.

ஒரு டேப்ளட் பிசியை, என்ன என்ன அம்சங்களைப் பார்த்து வாங்கலாம் என்று இங்கு பார்க்கலாம்.

1. டேப்ளட் பிசியின் அளவு:

டேப்ளட் பிசி வாங்கும் ஒவ்வொருவரும், அது தடிமன் குறைந்ததாகவும், குறைந்த எடை கொண்டதாகவும், எடுத்துச் சென்று பயன்படுத்த எளிதாகவும் இருக்க வேண்டும் என எண்ணுகின்றனர். அதே நேரத்தில், அதன் திரை என்ன அகலத்தில் இருக்க வேண்டும் என்பதில், பல வகையான அபிப்ராயங்கள் உள்ளன. ஐ×பேட் அதன் திரை 10 அங்குலம் (சரியாகச் சொன்னால் 9.56) என வரையறை செய்தது. அதன் எடை 750 கிராம் முதல் 900 கிராம் வரை என்ற ரீதியில் இருந்தது. சிலர் 12 அங்குல திரையை எதிர்பார்த்தனர். ஆனால், பொதுவாக ஐ×பேட் சற்று கூடுதல் தடிமனுடன் இருப்பதாக அனைவரும் கருத்து தெரிவித்தனர்.

தற்போது மார்க்கட்டில் வந்துள்ள டேப்ளட் பிசிக்கள், ஐ×பாட் பாணியைப் பின்பற்றாமல், மக்கள் விருப்பம் எனத் தாங்கள் கணித்தபடி, அவற்றைத் தந்துள்ளனர். சாம்சங் காலக்ஸி டேப் முதல் வெரிஸான் வரை 7 அங்குல திரை கொண்டுள்ளன. எடை 600 கிராமிற்கும் குறைவாகவே உள்ளது. எனவே நாள் முழுவதும் தூக்கிக் கொண்டு செயல்படுபவருக்கு, இது உகந்ததாகவே உள்ளது. அஸூஸ் நிறுவனம் 8 அல்லது 12 அங்குல அகலத்திரையுடன் டேப்ளட் பிசி தர இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, ஒருவருக்கு சிறியதாக இருப்பது, இன்னொருவருக்கு பெரியதாக இருக்கலாம். அளவு என்பது அவரவர் விருப்பத்தினைப் பொறுத்ததே.

2. ஸ்டோரேஜ் அளவு:

ஐ×பாட் 16, 32 மற்றும் 64 ஜிபி உள் நினைவகத் துடன் வந்தது. இதில் கூடுதல் நினைவகத்தை ஏற்படுத்த முடியாது. கூடுதலாக நினைவகம் வேண்டும் எனில், புதியதாகத்தான் வாங்க வேண்டும். விரிவு படுத்த வேண்டும் எனில், இவற்றில் வெளியிலிருந்து இணைத்துப் பயன்படுத்தக் கூடிய நினைவகத்தைத் தான் நாட வேண்டும். அப்படியானால், அதற்கான எஸ்.டி. அல்லது மைக்ரோ எஸ்.டி. ஸ்லாட் கொண்ட டேப்ளட் பிசி வேண்டும். அதிர்ஷ்டவசமாக, ஆண்ட்ராய்ட் மற்றும் விண்டோஸ் 7 இயக்கம் கொண்ட டேப்ளட் பிசிக்களில் இந்த வசதி தரப்பட்டுள்ளது. சாம்சங் கேலக்ஸி 16 மற்றும் 32 ஜிபி நினைவகத்துடனும், மைக்ரோ எஸ்.டி. ஸ்லாட்டுடனும் கிடைக்கிறது. பிமோடோ (bModo) என்னும் விண்டோஸ் டேப்ளட் பிசி, சற்று எடை கூடுதலாக இருந்தாலும், இரண்டு யு.எஸ்.பி. போர்ட் கொண்டு இருப்பதால், எக்ஸ்டர்னல் ஹார்ட் ட்ரைவ்களை இணைக்க வழி தருகிறது.

விண்டோஸ் 7 அடிப்படையில் இயங்கும் சி.டி.எல். (CTL) டேப்ளட் 250 ஜிபி ஹார்ட் ட்ரைவுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

3.பேட்டரி திறன்:

டேப்ளட் பிசிக்களில் அடுத்து கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் அதில் தரப்பட்டிருக்கும் பேட்டரி களாகும். ஐ×பேட் இந்த வகையில் 10 முதல் 12 மணி நேரம் வரை தொடர்ந்து மின் சக்தி தருவதாக அமைக்கப்பட்டு, பெயர் பெற்றுள்ளது. சாம்சங் கேலக்ஸியில், 7 மணி நேரம் ஹை டெபனிஷன் வீடியோ பார்க்கலாம் என விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. சாதாரண பணிகள் எனில், 10 மணி நேரம் பயன்படுத்தலாம் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால், விண்டோஸ் 7 இயக்கம் கொண்டுள்ள டேப்ளட் பிசிக்கள், இந்த விஷயத்தில் ஏமாற்றம் தருகின்றன. ஆப்பிள் மற்றும் ஆண்ட்ராய்ட் சிஸ்டம் உள்ள டேப்ளட் பிசிக்கள் நிறைவைத்

தருகின்றன.

4. 3ஜி அல்லது வை–பி மட்டுமா?

சில டேப்ளட் பிசிக்கள் 3ஜி அல்லது வை×பி நெட்வொர்க் இணைப்பு என ஏதேனும் ஒன்றையே தருகின்றன. இந்தியாவில் அறிமுகமாகும்போது, இதில் ஒரு தெளிவு ஏற்பட்டு, இரண்டும் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

5. சிஸ்டம்:

ஆண்ட்ராய்ட் போல ஓப்பன் சிஸ்டம் அல்லது விண்டோஸ் 7 போல குளோஸ்டு சிஸ்டம் எனத் தற்போது சாய்ஸ் உள்ளது. ஆண்ட்ராய்ட் சிஸ்டம் எனில், அது கொண்டுள்ள டேப்ளட் பிசியில் சில வரையறைகள் உள்ளன. விண்டோஸ் சிஸ்டம் கொண்டுள்ள டேப்ளட் பிசியில், இந்த வரையறைகள் இல்லை. எனவே, தேவைகளின் அடிப்படையில்தான் இவற்றைத் தேர்ந்தெடுக்க முடியும்.

6.உள்ளீடு வழிகள்:

ஐ×பேட் சாதனம் கொண்டுள்ள, ஆன்ஸ்கிரீன் கீ போர்ட், பெரிய அளவில் டாகுமெண்ட்களை உருவாக்க ஒரு தடையாகவே கருதப்படுகிறது. எனவே வயர்டு கீ போர்ட் அல்லது இணைப்பின்றி செயல்படும் புளூடூத் கீ போர்டு பயன்படுத்தியாக வேண்டும். ஆனால் ஆண்ட்ராய்ட் மற்றும் விண்டோஸ் இயக்க டேப்ளட் பிசிக்களில், யு.எஸ்.பி. போர்ட் கொடுக்கப்பட்டிருப்பதால், அதன் இணைப்பில் கீ போர்டுகளைக் கொண்டு, விரைவாகச் செயல்படலாம்.

7. விலை:

மிக முக்கியமான ஒரு விஷயம் விலையே. இந்திய வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் விலையின் அடிப்படையிலேயே எந்த சாதனத்தினையும் வாங்கிப் பயன்படுத்த முன்வருவார்கள் என்பது ஏற்கனவே மொபைல் போன் மற்றும் சில சாதனங்களில் நிரூபணம் ஆகி உள்ளது. எனவே, இந்தியாவில் டேப்ளட் பிசிக்கள் விற்பனைக்கு நேரடியாக அறிமுகம் ஆகும்போது இந்த அம்சமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கலாம்.

8. சிரிங்க, கேமரா முன்னால இருக்கு:

ஐ×பேட் சாதனம் குறித்துக் கருத்து தெரிவிக்கையில், அதில் கேமரா இல்லாதது பலமாகப் பேசப்பட்டது. பொதுவான போட்டோ எடுக்கும் வகையிலான கேமரா அந்த சாதனத்திற்குள் இல்லை. எனவே போட்டோ எடுக்க வேண்டும் அல்லது வீடியோ கான்பரன்சிங் செயல்பாட்டினை மேற்கொள்ள வேண்டும் எனில், ஆப்பிள் ஐ×பேட் உகந்தது அல்ல என்ற கருத்தினை அனைவரும் மேற்கொண்டுள்ளனர். மற்ற பெரும் பாலான நிறுவனங்களின் படைப்புகள் கேமராவினைக் கொண்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

9. கூடுதல் அப்ளிகேஷன் புரோகிராம்கள்:

ஸ்மார்ட் போன் ஒன்றைத் தேர்ந்தெடுக்கையில், அதில் எத்தனை அப்ளிகேஷன் புரோகிராம்களைப் பதிந்து இயக்கலாம் எனவே அனைவரும் எதிர்பார்க் கின்றனர். ஆப்பிள் அப்ளிகேஷன் ஸ்டோர், ஐ×பேட் மற்றும் ஐ×போனுக்கென ஆயிரக் கணக்கில் அப்ளிகேஷன் புரோகிராம்களைக் கொண்டுள்ளது. ஆனால் ஐ×பேட் சாதனத்திற்கான புரோகிராம்கள் என எடுத்துக் கொண்டால், அவை சற்றுக் குறைவான எண்ணிக்கையிலேயே உள்ளன. விண்டோஸ் அடிப்படையில் இயங்கும் டேப்ளட் பிசிக்களுக்கான அப்ளிகேஷன் புரோகிராம்கள் பல வர இருப்பதாக தகவல்கள் இதனாலேயே வெளிவந்த வண்ணம் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே, எந்த ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும் டேப்ளட் பிசிக்களை வாங்குவது என்றும் முடிவு செய்திடலாம்.

10.ஒத்திசைந்த செயல்பாடு:

ஒரு டேப்ளட் பிசி தனியே மட்டும் இயங்காது. உங்களுக்கு 3ஜி டேப்ளட் பிசி வேண்டும் என்றால், அது உங்களுக்கு அந்த சேவையைத் தரும் நிறுவனத்தின் செயல்பாட்டுடன் இணைந்து செல்ல வேண்டும். கேலக்ஸி டேப் போன்ற டேப்ளட் பிசிக்கள், ஜி.எஸ்.எம். மற்றும் சி.டி.எம்.ஏ வகை இணைப்புகளுடன் இணைந்து செயலாற்றும் தன்மை கொண்டவையாக உள்ளன. எனவே டேப்ளட் பிசியைத் தேர்ந்தெடுக்கையில் இதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில், நமக்கு எந்த மாதிரி டேப்ளட் பிசி வேண்டும் என ஒரு பரவலான முடிவினை எடுத்து வைத்துக் கொள்ளலாம். இந்தியச் சந்தையில், அதிக எண்ணிக்கையில் நிறுவனங்கள், டேப்ளட் பிசிக்களைக் கொண்டு வருகையில், முடிவினை எடுக்க இது உதவியாக இருக்கும்.

எக்ஸெல் டிப்ஸ்

எக்ஸெல் தகவல் வேர்டில் அட்டவணையாக:

எக்ஸெல் ஒர்க் புக் ஒன்றின் ஒர்க்ஷீட்டில் மிக முக்கியமான தகவல்களை அழகாக நெட்டு வரிசை அல்லது படுக்கை வரிசையில் அமைத்திருக்கிறீர்கள். இவற்றை வேர்ட் டாகுமெண்ட் பைல் ஒன்றிலும் ஓர் அட்டவணையாக அமைக்க விரும்புகிறீர்கள். என்ன செய்யலாம்? டேபிள் ஒன்றை உருவாக்கி அதில் உள்ள கட்டங்களில் எக்ஸெல் பைல் செல்களில் உள்ளவற்றை ஒவ்வொன்றாக காப்பி



அண்ட் பேஸ்ட் செய்திடப் போகிறீர்களா? அப்படியே காப்பி செய்து ஒட்டினால் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கிறதா? இதனைத் தீர்க்க வழி ஒன்று இருக்கிறது. எக்ஸெல் ஒர்க் ஷீட்டில் எந்த செல்களை ஒட்ட வேண்டுமோ அவற்றை தேர்ந்தெடுங்கள்; பின் கண்ட்ரோல்+சி (Ctrl+ C) கொடுத்து காப்பி செய்திடுங்கள். பின் வேர்ட் டாகுமெண்ட்டில் எடிட் (Edit) மெனு சென்று பேஸ்ட் ஸ்பெஷல் (Paste Special) என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அதில் கிடைக்கும் மெனுவில் Microsoft Office Excel Worksheet Object என்பதனைத் தேர்ந்தெடுத்து ஓகே செய்திடவும். மிக அழகாக டேபிள் அட்டவணைக் கட்டங்கள் போல தகவல்கள் அமைக்கப்பட்டுவிடும். இது போல பல வகைகளில் இந்த இரண்டு புரோகிராம்களும் இணைந்து செயல்படும்.

எக்ஸெல் ஆக்டிவ் செல் செல்ல:

மிகப் பெரிய அளவில் ஸ்ப்ரெட் ஷீட் தயாரிப்பவர்கள், அடிக்கடி, கீழ் மேலாக உள்ள செல்களில் உள்ள தகவல்களைத் தேடிப் பார்த்து, பின்னர், பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆக்டிவ் செல்களில், டேட்டாவினை நிரப்புவார்கள். இவ்வாறு செல்கையில், சில வேளைகளில் ஆக்டிவ் செல்களை மீண்டும் தேடிப் பெறுவது சிரமமாயிருக்கும். இதற்கு ஒரு வழி உண்டு. ஆனால் அதற்கு ஆக்டிவ் செல்லின் எண்ணை நினைவில் வைத்திருக்க வேண்டும். கண்ட்ரோல் + ஜி அழுத்தி, செல் எண்ணை டைப் செய்தால், உடனே, ஆக்டிவ் செல் காட்டப்பட்டு, அதில் கர்சர் இருப்பதைப் பார்க்கலாம். எத்தனை பேர் இதனை நினைவில் வைத்திருப்பார்கள். அப்படியானால், என்னதான் வழி என்று சிந்திக்கிறீர்களா?

ஆக்டிவ் செல் திரையில் இல்லாமல், ஒர்க்ஷீட்டின் வேறு பகுதியில் நீங்கள் இருந்தால், கண்ட்ரோல் + பேக் ஸ்பேஸ் கீ அழுத்துங்கள். உடனே, உங்கள் ஆக்டிவ் செல் இருக்கும் இடம் காட்டப்படும். இதில் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய செய்தி, உங்கள் ஆக்டிவ் செல், அப்போது திரையில் தோன்றும் செல்களில் இருக்கக் கூடாது. இருப்பின், திரையும், ஒர்க் ஷீட்டின் அந்த பகுதியும் அப்படியே தான் இருக்கும்.

உடனுடக்குடன் ஸ்ப்ரெட் ஷீட் மாற:

ஒரே நேரத்தில், பல ஒர்க்ஷீட்களைத் திறந்து வைத்துப் பயன்படுத்துபவரா நீங்கள்! இவற்றிற் கிடையே தகவல்களை மாற்றி மாற்றிப் பதிய, மவுஸ் கொண்டு இயக்க வேண்டியதிருக்கும். இது கீ போர்டு மூலம் தகவல்களை வேகமாக நிரப்பும் உங்களுக்கு, அடிக்கடி மவுஸைப் பயன் படுத்துவது சிரமமாக இருக்கும். இதற்கு கீ போர்டு மாற்று வழி ஒன்றுள்ளது. ஸ்ப்ரெட்ஷீட்களுக் கிடையே மாறிக் கொள்ள, Ctrl+F6 ஆகிய கீகளை அழுத்தவும். இவ்வாறு அழுத்தும் போது, திறந்திருக்கும் ஒர்க் புக்குகள் வரிசையாகத் தேர்ந்தெடுக்கப் படும். எடுத்துக் காட்டாக, மூன்று ஒர்க்புக்குகள் திறந்திருந்தால், மூன்று முறை Ctrl+F6 கீகளை அழுத்தினால், அவை ஒவ்வொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறுதியில் முதலில் இருந்த ஒர்க்புக்குக்கே திரும்ப வருவீர்கள்.

சில ஷார்ட்கட் கீகள்:

காமென்ட்ஸ் உள்ள செல்களை மட்டும் செலக்ட் செய்திட கண்ட்ரோல்+ஷிப்ட்+ஓ

(Ctrl+Shft+O) அழுத்தவும். எந்த செல்லிலும் கமென்ட்ஸ் இல்லை என்றால் No cells found என்ற செய்தி கிடைக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பார்முலாவிற்கு எந்த செல்கள் எல்லாம் தொடர்பு உள்ளது என்று அறிய CTRL+[அழுத்தவும்.

Ctrl+] கீகளை அழுத்தினால் எந்த செல்லில் கர்சர் இருக்கிறதோ அந்த செல் சம்பந்தப்பட்ட பார்முலாக் கள் காட்டப்படும்.

ஷிப்ட் + ஆரோ கீ (Shft+Arrow key) அழுத்தினால் செல்கள் தேர்ந்தெடுக்கப்படுவது ஒரு செல்லுக்கு நீட்டிக்கப்படும்.

கண்ட்ரோல் + ஷிப்ட் + ஆரோ கீ (Ctrl+Shft+Arrow key) அழுத்தினால் அதே படுக்கை அல்லது நெட்டு வரிசையில் டேட்டா இருக்கும் கடைசி செல் வரை செலக்ஷன் நீட்டிக்கப்படும்.

ஷிப்ட் + ஹோம் கீகள் (Shft+Home) அழுத்தப்படுகையில் படுக்கை வரிசையின் முதல் செல் வரை செலக்ஷன் நீட்டிக்கப்படும்.

கண்ட்ரோல்+ஷிப்ட்+ ஹோம் (Ctrl+Shft+Home) கீகள் அழுத்தப்படுகையில் செலக்ஷன் ஒர்க் ஷீட்டின் முதல் செல் வரை நீட்டிக்கப்படும்.

கண்ட்ரோல்+ஷிப்ட் + எண்ட் (Ctrl+Shft+End) கீகள் அழுத்தப்படுகையில் செலக்ஷன் ஒர்க்ஷீட்டில் கடைசியாகப் பயன்படுத்தப்பட்ட செல் வரையில் நீட்டிக்கப்படும்.

என்டர் கீ (Enter) அழுத்தப்படுகையில் அந்த செல் முடிக்கப்பட்டு கர்சர் கீழாக உள்ள செல்லுக்குச் செல்லும்.

ஆர்.ஐ.எம். நிறுவனத்தின் டேப்ளட் பி.சி.

பிளாக்பெரி போன்களைத் தயாரித்து வழங்கும் ரிசர்ச் இன் மோஷன் (ஆர்.ஐ.எம்.) நிறுவனம், டேப்ளட் பி.சி. ஒன்றை வடிவமைத்து 500 டாலருக்கும் குறைவாக விற்பனை செய்திட அறிவித்துள்ளது. அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் இது அமெரிக்காவில் விற்பனைக்கு வரும். ஆப்பிள் நிறுவனத்தின் ஐ×பாட் சாதனத்திற்குப் போட்டியாக இது விலையிடப்படும் எனத் தெரிகிறது.

ஆப்பிள் நிறுவனத்தின் ஐ×பேட் வெளியான பின், மக்கள் ஐ×பேட் மற்றும் லேப் டாப் கம்ப்யூட்டர் களுக்கிடையே, அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் ஒரு சாதனத்தை எதிர்பார்த்தனர் என்றும், அதனைத் தரும் முயற்சியில் ஆர்.ஐ.எம். நிறுவனம் இணைந்துள்ளது என்றும் இந்நிறுவன உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆர்.ஐ.எம். நிறுவனத்தின் டேப்ளட் பி.சி. மற்ற நிறுவனங்கள் தராத ஒரு வசதியைத் தரும் என்று அறிவித்துள்ளார். அடோப் நிறுவனத்தின் பிளாஷ் தொழில் நுட்பத்தின இது கொண்டிருக்கும் என்றும், அதன் மூலம் இன்டர்நெட்டில் இடம் பெற்றிருக்கும் பல வீடியோ பைல்களின் இயக்கம், இதனைப் பயன்படுத்துபவருக்கு எளிதாகக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கூகுளின் பெரிய செய்திகளை நீக்க

இணையம் பயன்படுத்தும் யாவரும் இமெயிலுக்கென செல்வது ஜிமெயில் ஆகும். அதிக அளவில் மெயில்களைச் சேர்த்து வைத்திட ஜிமெயில் 7 ஜிபி இடம் தருவதனால், யாரும் வந்த மெயில்களை இன்பாக்ஸிலிருந்து நீக்குவதில்லை. இருந்தாலும், ஏதேனும் ஒரு நாளில், மொத்தமாகச் சேர்ந்த மெயில்களினால், கூகுளிலும் இடம் இல்லாமல் போய்விடலாம் அல்லவா? ஜிமெயில் தொடங்கிய நாள் முதல் அதனைப் பயன்படுத்தி வருபவர்கள் பலருக்கு, இந்த சூழ்நிலை தற்போது ஏற்பட வாய்ப்புகள் அதிகம். உங்கள் ஜிமெயில் இன்பாக்ஸில் அதிக மெயில்கள் சேர்ந்து, 7 ஜிபி அளவை எட்ட இருக்கையில் "You have run out of space for your Gmail account. You will not be able to send or receive any emails until you delete some items" என ஒரு செய்தி கிடைக்கலாம். அப்படி ஒரு சூழ்நிலையைத் தவிர்க்க, நம் ஜிமெயில் இன்பாக்ஸில் உள்ள மெயில்களில், அதிக அளவு இடத்தைப் பிடித்திருக்கும் மெயில்களைக் கண்டறிந்தால், அவற்றை நீக்கிவிடலாமே! தேவையற்ற இணைப்புகள், போட்டோக்கள், இமேஜ், வீடியோ கிளிப்கள் என அதிகம் இடம் பிடிக்கும் மெயில்களை எப்படிக் கண்டறிவது என்று இங்கு காணலாம்.

இதற்கு நமக்கு உதவுவது FindBigmail என்னும் சேவையாகும். இந்த சேவை, நம் ஜிமெயில் இன்பாக்ஸினை முழுமையாக ஸ்கேன் செய்து, எந்த எந்த மெயில்கள், அதிக அளவில் இணைப்புகளைக் கொண்டுள்ளன என்று காட்டும். அவற்றைத் தனியே வடிகட்டும். இதனை எப்படி மேற்கொள்வது என்று பார்க்கலாம்.

1. முதலில் http://findbigmail.com/ என்ற முகவரியில் உள்ள தளம் செல்லவும். 2. அங்கு உங்கள் இமெயில் முகவரியைத் தரச் சொல்லி கட்டம் கிடைக்கும். பின்னர், அருகே உள்ள பட்டனில் கிளிக் செய்தவுடன், உங்கள் இமெயில் அக்கவுண்ட்டில் நுழைய, உங்கள் அனுமதி கேட்கப்படும்.

3. அனுமதி கொடுத்தவுடன், FindBigmail தன் பணியைத் தொடங்கும். பெரிய அளவிலான இணைப்புகள், படங்கள், டாகுமெண்ட்கள் மற்றும் பிற பைல்களைக் காட்டும். உங்கள் மெயில் இன்பாக்ஸைப் பொறுத்து, இந்த பணி முடிய 30 நிமிடங்கள் அல்லது ஒரு மணி நேரம் ஆகலாம். இந்த பணி நடக்கையில், நீங்கள் தொடர்ந்து உங்கள் இமெயில் பார்க்கும் பணியையும் மேற்கொள்ளலாம்.

4. தேடல் நடக்கும்போதே, எத்தனை மெயில்களில் அதிக அளவில் இணைப்புகள் உள்ளன என்ற செய்தி காட்டப்படும். இந்த தேடல் முடியும் வரை, உங்கள் பிரவுசரை மூடக் கூடாது. முடிவில், மிகப் பெரிய மெசேஜ்களின் எண்ணிக்கை, ஓரளவில் இடத்தைப் பிடித்தி ருக்கும் மெயில்களின் எண்ணிக்கை என சார்ட் மூலம் காட்டப்படும். அதன் அருகே உள்ள லிங்க்கில் கிளிக் செய்தால், அவை பட்டியலிடப் படும். அவற்றில் கிளிக் செய்து, படித்துப் பார்த்து, தேவையில்லை என்றால், அவற்றை நீக்கிவிடலாம். இந்த சேவை, பல புதிய லேபிள்களையும் உருவாக்கும். அவற்றில் அதிக அளவில் இடம் பிடிக்கும் டாப் 20 இமெயில்கள், பின்னர் அளவின் அடிப்படையில் இடம் கொண்டிருக்கும் இமெயில்களுக்கான லேபிள்கள் இருக்கும். இவற்றை ஜிமெயிலின் பக்கவாட்டில் இருக்கும் சைட்பாரில் காணலாம். இவற்றைக் கிளிக் செய்து, மொத்தமாகவும், தனித்தனியாகவும் அழிக்கலாம். மொத்தமாக அழிக்க, Settings > Labels சென்று அழிக்கலாம். ஒவ்வொன்றாகவும் நீக்கலாம். இவற்றை அழிக்கையில், எவ்வளவு இடம் கிடைக்கிறது எனவும் காட்டப்படும். இவ்வளவும் முடிந்த பின்னர், பெரிய வீட்டில் இஷ்டத்திற்கு விளையாடும் குழந்தை போல, உங்கள் ஜிமெயிலை நீங்கள் பயன்படுத்தலாம்.

வரும் புத்தாண்டில், கூகுள்

கூகுள் ஊழியருக்குப் புத்தாண்டு

நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களின் ஊதியம் 10% உயர்த்தப்பட இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஏறத்தாழ 23 ஆயிரம் ஊழியர்கள், பல நாடுகளில் இந்நிறுவனத்திற்காகப் பணியாற்றி வருகின்றனர். நிரந்தர மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

பத்தில் ஒன்றில் விண்டோஸ் 7

விண்டோஸ் 7 ஆப்பரேட்டிங் சிஸ்டம் பயன்பாடு குறித்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில், பாரஸ்டர் ரிசர்ச் மையம், ஒரு ஆய்வினை மேற்கொண்டது. அதன்படி, வர்த்தகப் பயன்பாடுகளுக்குப் பயன்படும் கம்ப்யூட்டர்களில் பத்தில் ஒரு (10%)கம்ப்யூட்டரில் விண்டோஸ் 7 இயக்கத் தொகுப்பு பயன்படுத்தப்படுகிறது. இது இனி வரும் நாட்களில் அதிகமாகும் என்றும் அந்தக் கணிப்பு கூறுகிறது.

மற்ற கம்ப்யூட்டர்களில் என்ன ஆப்பரேட்டிங் சிஸ்டம் பயன்படுத்தப்படுகிறது என்ற தகவலையும் இந்த கணிப்பு முடிவுகள் அறிவித்துள்ளன.விஸ்டா × 6%, லினக்ஸ் × 2%, மேக் ×4%, விண்டோஸ் 2000 × 3%, விண்டோஸ் எக்ஸ்பி × 75% என்ற வகையில் உள்ளன. விண்டோஸ் 7 சிஸ்டம் வெளியாகி (அக்டோபர் 22, 2009) ஓராண்டு கடந்த நிலையிலும், விண்டோஸ் எக்ஸ்பி மீது உள்ள பிரியத்தை விலக்கி, விண்டோஸ் 7 மேற்கொள்ள பலருக்கு விருப்பமில்லை. ஆனால் இனி வருங்காலத்தில், புதிய கட்டமைப்பு உள்ள கம்ப்யூட்டர்களுக்கு மக்கள் மாறுகையில், அவர்கள் ஆப்பரேட்டிங் சிஸ்டமாகத் தேர்ந்தெடுப்பது விண்டோஸ் 7 ஆகத்தான் இருக்கும். 90% பேர் அந்த நோக்கத்தில் உள்ளதாகவும் இந்த ஆய்வு அறிவித்துள்ளது.

கூகுள் சரி செய்த பிழைகள்

தன்னுடைய குரோம் பிரவுசரில் இருந்த, மிக மோசமான 12 பிழைகளைச் சென்ற வாரம் கூகுள் சரி செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்துமே, மிகப் பெரிய அளவில் பாதிப்பிற்கு வழி தரக்கூடியவையாக இருந்து வந்தன. அடோப் பிளாஷ் பிளேயர் மற்றும் பி.டி.எப். ஆவணங்களைத் திறக்கையில் ஏற்படும் பிழைகளும் இதில் சரி செய்யப்பட்டன. இந்த பிழைகளைக் கண்டறிந்த ஆய்வாளர்களுக்கு கூகுள் நிறுவனம் 7,500 டாலர் வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது.

உங்களுக்குத் தெரியுமா?

ஆண்ட்ராய்ட் பெற்ற லட்சம் அப்ளிகேஷன்கள்

கூகுள் நிறுவனம் வெளியிட்ட ஆண்ட்ராய்ட் சிஸ்டத்திற்கு வெளியிடப் படும் அப்ளிகேஷன் புரோகிராம்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை அண்மையில் தாண்டியது. இது கூகுளுக்கு ஒரு சாதனைக் கல் தான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஆண்ட்ராய்ட் சிஸ்டம் வெளியிடப்பட்டது. சென்ற ஏப்ரல் மாதம், இந்த புரோகிராம்களின் எண்ணிக்கை 50 ஆயிரமாக இருந்தது. தற்போது ஒரு லட்சம் என்ற எண்ணிக்கையை எட்டியுள்ளது. ஒரு சிலர் இந்த எண்ணிக்கை கணக்கு தவறு. சந்தையில் கிடைக்கும் ஆண்ட்ராய்ட் அப்ளிகேஷன் புரோகிராம்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

இந்த வகையில், ஆப்பிள் நிறுவனம் முன்னணியில் உள்ளது. அதன் ஐபோன், ஐபாட் டச் மற்றும் ஐபாட் சாதனங்களுக்கான அப்ளிகேஷன் எண்ணிக்கை 2,80,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு சின்ன பெர்சனல் பிரேக்

லினக்ஸ் குறித்த தெளிவான தகவல்கள், அந்த சிஸ்டம் சார்ந்த பல பயங்களைப் போக்கியது. மேலும் இதன் பயன்களையும் பட்டியலிட்டது, அதனைப் பயன்படுத்தத் தூண்டுவதாக உள்ளது.

–சி.ம. கார்த்திக் ராஜன், காரைக்குடி.

லினக்ஸ் பதிப்புகள் அனைத்தையும் பட்டியலிட்டு, ஒவ்வொன்றின் தனிச் சிறப்புகளை எழுதினால், இன்னும் பல செய்திகள் நம் வாசகர்களைச் சென்றடையும்.

–டாக்டர் எஸ். பிரேம்குமார்,மதுரை.

நீங்கள் விவரமாகத் தந்துள்ள விண்டோஸ் 7 ஷார்ட் கட் கீகளை உருவாக்கிப் பயன்படுத்துகிறேன். அனைத்தும் நன்கு வேலை செய்கின்றன. நன்றி.

–கா. ஞான சம்பந்தன், திருத்தணி.

பிரவுசரின் டேப்களுக்கு இவ்வளவு டிப்ஸ்களா! நீங்கதான் சார் சின்ன விஷயத்தைக் கூட விடாமல், எங்களுக்கு விளக்குகிறீர்கள். அவற்றை செயல் படுத்தியபோது வியப்பாக இருந்தது.

–என். பரந்தாமன், திருப்பூர்.

ஆட்டோ டெக்ஸ்ட் நம் நேரத்தை மிச்சப்படுத்தும் அருமையான ட்ரிக். எங்கள் அலுவலகப் பயன்பாட்டிற்கு பல என்ட்ரிகளை உருவாக்கி வைத்துப் பயன்படுத்து கிறோம்.

–கே.பத்மலதா, சென்னை.

ரோமிங் கட்டணம் நீக்கப்பட்டால், அது இந்திய மக்களுக்கு பெரும் உதவியாய் இருப்பதுடன், பொருளாதார முன்னேற்றத் திற்கும் வழி வகுக்கும்.

–பேரா. தி. கார்த்திகேயன், மதுரை.

என் சிறிய சந்தேகக் கேள்விக்கு நீண்ட பதில் அளித்துப் பல தகவல்களைத் தந்தமைக்கு நன்றி.

–எஸ். ஷோபா தேவி, மதுரை.

ஷார்ட்கட் கீ தொகுப்புகள் தரும் இணைய தளம் சென்று பார்த்தேன். பல தொகுப்புகளுக்கு ஷார்ட்கட் கீகள் தரப்பட்டுள்ளன. இருப்பினும் நம் கம்ப்யூட்டர் மலரில் உள்ள விளக்கம் வேறு எங்கும் கிடைக்காது.

–டி.எல். மரிய ஜோசப் சேவியர், கோயம்புத்தூர்.

வேர்ட் டாகுமெண்ட்டுக்குப் பேக் அப் காப்பி, தானாக எடுக்கும் வகையில் அமைக்கலாம் என்பது, இத்தனை ஆண்டுகளாகப் பயன்படுத்தும் எனக்குப் புதுமையாக இருந்தது. தொடர்ந்து இதே போல பல வற்றை நினைவு படுத்தவும்.

–ஏ.எல். கிரிதரன், புதுச்சேரி

டேப்ளட் பிசியை அரசு சலுகை விலையில் தருவதாகச் செய்தி தந்துள்ளீர்கள். இவற்றை எப்படிப் பெறுவது, எங்கு விண்ணப்பிப்பது என்று கூடுதல் தகவல்களைச் சரியான நேரத்தில் தந்தால் பயனளிக்கும்.

–கா. திரவியம், ஆசிரியர், திண்டிவனம்.

எக்ஸெல் ஸ்ப்ரெட் ஷீட்டில் எழுத்துக்களை டிசைன் டிசைனாக அமைக்கும் வழி சூப்பர். இந்த வசதி பற்றி தெரிந்த பின்னர், எங்கள் ஸ்ப்ரெட் ஷீட் வேலை எல்லாம், காலண்டர் ஷீட் மாதிரி ஆகிக் கொண்டிருக்கிறது.

–என். பிரசன்ன லஷ்மி, செங்கல்பட்டு.

நோக்கியா சி1

இரண்டு சிம்களுடன் பயன்படுத்தக் கூடிய மொபைல் போன்களை சென்ற மாதம் நோக்கியா வெளியிட்டது. அப்போது அறிவிக்கப்பட்ட சி1 கேண்டி பார் வடிவ மொபைல் இப்போது சந்தையில் கிடைக்கிறது. பட்ஜெட் விலையில், இரண்டு சிம்களில் இயங்கும் மொபைல் வாங்க விரும்புவோருக்கு இந்த போன் உகந்ததாக இருக்கும். ஒரு பட்டன் அழுத்தி இரண்டு சிம்களின் இயக்கத்தினை மாற்றிக் கொள்ளலாம். இதன் லித்தியம் அயன் 1020 பேட்டரி தொடர்ந்து 13 மணி நேரம் பயன்படுத்த சக்தி அளிக்கிறது. இதன் பரிமாணம் 107.1 x 45 x 15 மிமீ . எடை 72 கிராம். 1.8 அங்குல வண்ணத்திரை. எம்பி3 ரிங் டோன், அழைப்பு வருகையில் அதிர்வு, ஸ்□க்கர் போன், 3.5 மிமீ ஆடியோ ஜாக், 500 முகவரிகளுக்கான அட்ரஸ் புக் ஆகியவை உள்ளன. நெட்வொர்க் இணைப்பிற்கான எந்த வசதியும் தரப்படவில்லை. கேமரா இல்லை. எஸ்.எம்.எஸ். அனுப்பலாம். எப்.எம். ரேடியோ, கேம்ஸ் வசதி தரப்பட்டுள்ளது. நான்கு வண்ணங்களில், ரூ. 1,685 அதிகபட்ச விலையாகக் குறிப்பிட்டு விற்பனை செய்யப்படுகிறது.

★ லிப்ட், அலுவலக அறை, ஹோட்டல், மருத்துவமன மற்றும் கடைகளில் மொபைலில் பேசுவதைத் தவிர்க்கவும்.

★ உரக்கப் பேசி உங்கள் அந்தரங் கத்தினை அடுத்தவர் அறிய வாய்ப்பு தர வேண்டாம்

★ சென்சிடிவ் மைக் உள்ளதால் மென்மை யாக மொபைலில் பேசவும்.

பிளாக்பெரி போல்டு 9780

ஆர்.ஐ.எம். நிறுவனத்தின் பிளாக் பெரி ஆப்பரேட்டிங் சிஸ்டம் 6 உடன் வடிவமைக்கப்பட்ட முதல் மொபைல் போனாக, பிளாக் பெரி போல்டு 9780 விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

2.4 அங்குல அகலத்தில் திரை, 400 x 360 ரெசல்யூசனில் காட்சி அமைப்பு, உலகெங்கும் உள்ள 3ஜி நெட்வொர்க் இணைப்பு, வை×பி நெட்வொர்க் இணைப்பு, இயங்கும் இடத்திற்கேற்ற வகையில் அப்ளிகேஷன் புரோகிராம் இயக்கம், ஜியோ டேக்கிங் முறையில் இயங்கும் இடம் கண்டறிந்து காட்டுதல், தொடர்ந்த ஆட்டோ போகஸ் கொண்ட 5 மெகா பிக்ஸெல் கேமரா, பிளாஷ் மற்றும் வீடியோ ரெகார்டிங், 512 எம்.பி. பிளாஷ் மெமரி, 32 ஜிபி வரை மெமரி அதிகப்படுத்த ஸ்லாட் வசதி எனப் பல தூக்கலான வசதிகள் கொண்ட இந்த போன் நவம்பர் இரண்டாம் வாரத்தில் இங்கு கிடைக்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

புதிய இரு வரவுகள்

மொபைல் சந்தையில், சென்னையிலும் மற்ற தமிழக நகரங்களிலும் அண்மையில் விற்பனைக்கு வெளியான சில மொபைல் போன்கள் குறித்த தகவல்களை இங்கு பார்க்கலாம். குறிப்பாக சில போன்கள் 3ஜி சேவையுடன், மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு வந்துள்ளன.

1.சாம்சங் சி5010 ஸ்குவாஷ்: கேண்டி பார் வடிவமைப்பில் வந்துள்ள இந்த மொபைல் போன், 2 அங்குல வண்ணத் திரையுடன், டிஜிட்டல் ஸூம் வசதி கொண்ட 1.3 மெகா பிக்ஸெல் கேமராவுடன் கிடைக்கிறது. இதன் சிறப்பு 3ஜி சேவைக்கான சப்போர்ட் இதில் இருப்பதாகும். 3ஜி சேவையில் டேட்டா மட்டும் கிடைக்கிறது. 900 / 2100MHz ஆகிய அலைவரிசைகளில் 3ஜி சேவையைத் தருகிறது. வழக்கமான ஜி.எஸ்.எம். இணைப்பினை நான்கு அலைவரிசைகளில் இயக்குகிறது. அத்துடன் நெட்வொர்க் இணைப்பிற்கு புளூடூத், ஜி.பி.ஆர்.எஸ். WAP 2.0 மற்றும் இணைக்கப்பட்டுள்ளன. போனின் மெமரி 42 எம்பி. மைக்ரோ எஸ்.டி. கார்ட் மூலம் இதனை 8 ஜிபி வரை அதிகப்படுத்தலாம். எஸ்.எம்.எஸ். மற்றும் எம்.எம்.எஸ். வசதிகள் உள்ளன. எம்பி3 பிளேயர், எப்.எம். ரேடியோ உள்ளன. வாய்ஸ் ரெகார்டர் மற்றும் ஸ்□க்கர் இணைந்துள்ளன. இதன் எடை 81 கிராம். அதிக பட்ச விலை ரூ. 3,350.

2.எல்.ஜி. ஜி.ட்டி. 350 குக்கி கிளைட்: இதனை எல்.ஜி. எட்னா ப்ளஸ் எனவும் அழைக்கின்றனர். மிகவும் அழகான வடிவமைப்பில், ஸ்லைடிங் மொபைல் போனாக இது உருவெடுத்துள்ளது. பக்க வாட்டில் இதன் குவெர்ட்டி கீ போர்டு ஸ்லைடிங் முறையில் வழுக்கிக் கொண்டு கிடைக்கிறது. முழுமையான ரெசிஸ்டிவ் டச் ஸ்கிரீன், 2 எம்.பி.கேமரா உள்ளன. இதன் பரிமாணம் 107.5 x 52.5 x 15.9 மிமீ. எடை 125 கிராம். ஆயிரம் முகவரிகள் கொள்ளும் அட்ரஸ் புக், போட்டோ மூலம் அழைக்கும் வசதி, அழைப்புகள் பதிவு ஆகியன இதன் சிறப்புகள். உள் நினைவகம் 56 எம்பி. மைக்ரோ எஸ்.டி. கார்ட் மூலம் நினைவகத்தினை 8 ஜிபி வரை அதிகப்படுத்தலாம். ஜி.பி.ஆர்.எஸ். மற்றும் எட்ஜ் தொழில் நுட்பம், நெட்வொர்க் இணைப்பிற்கு வழி அமைக்கின்றன. A2DP இணைந்த புளூடூத், மைக்ரோ யு.எஸ்.பி. ஸ்லாட், எஸ்.எம்.எஸ்., எம்.எம்.எஸ்., இமெயில், ட்ரான்ஸ்மீட்டர் வசதி கொண்ட ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ, எம்பி3 மற்றும் எம்பி 4 பிளேயர், டாகுமெண்ட் வியூவர், ஆர்கனைஸர், வாய்ஸ் மெமோ ஆகியவை மற்ற வசதிகளாகும். 950 mAh லித்தியம் அயன் பேட்டரி தொடந்து 5.5 மணி நேரம் பேசக்கூடிய சக்தியை தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அதிக பட்ச விலை ரூ.7,392.

சாம்சங் சி 3300 கே சாம்ப்

நடுத்தர விலையில், நவீன வசதிகளுடன் கூடிய மொபைல் போனாக சாம்சங் சி 3300 கே சாம்ப் வெளிவந்துள்ளது. இதன் சிறப்பு அம்சமாக, இதன் டச்விஸ் லைட் 2 கொண்ட தொடுதிரையைக் கூறலாம். தொட்டுப் பயன்படுத்தும் இன்டர்பேஸ் ஒரு புதிய அனுபவத்தினைத் தருகிறது. தோற்றத்தில் இது ஒரு அதி நவீன தொழில் நுட்பம் கொண்ட போனாகக் காட்சி அளிக்கிறது.

2ஜி தொழில் நுட்பத்தில், அதன் அலைவரிசையில் ஜி.எஸ்.எம். நெட்வொர்க்கில் செயல்படும் இந்த போன், 80 கிராம் எடையில், 96.3 x 53.8 x 13மிமீ பரிமாணத்தில் கிடைக்கிறது. இதன் டி.எப்.டி. ரெசிஸ்டிவ் டச் ஸ்கிரீன், தொடுதலில் வண்ண ஜாலம் காட்டுகிறது. ஸ்டீரியோ ஸ்□க்கர்களும், 3.5 மிமீ ஆடியோ ஜாக்கும், கேட்பதனை நல்ல அனுபவமாகத் தருகின்றன. 1000 முகவரிகள் கொள்ளும் அட்ரஸ் புக், போட்டோ வழி அழைப்பு, 30 எம்பி நினைவகம், 8 ஜிபி வரை மெமரி அதிகப்படுத்தும் திறன், ஜி.பி.ஆர்.எஸ்., எட்ஜ், A2DP இணைந்த புளூடூத் தொழில் நுட்பம் பயன்படுத்தப் பட்டுள்ளது.

1.3 எம்பி திறன் கொண்ட கேமரா, விநாடிக்கு 15 பிரேம் இயங்கும் வீடியோ பதிவு, எஸ்.எம்.எஸ்., எம்.எம்.எஸ்., ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ, எம்பி3 பிளேயர் ஆகியவை இதன் மற்ற சிறப்புகளாகும். இதன் லித்தியம் அயன் 1000 mAh பேட்டரி, தொடர்ந்து 12 மணி நேரம் பேச திறன் அளிக்கிறது. ஒரு முறை சார்ஜ் செய்தால், 66 மணி நேரம் தாக்குப் பிடிக்கிறது. இதன் அதிகபட்ச விலை ரூ. 3,926 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்வி பதில்

கேள்வி: நான் டெக்னிக்கல் டாகுமெண்ட்ஸ் அதிகம் எழுதுபவன். வழக்கமாக, வாக்கியங்களின் முதல் எழுத்துத் தானாக, கேப்பிடல் எழுத்தில் அமைவதை நிறுத்திவிடுவேன். வேர்ட் 2010 தொகுப்பில் இதனை எப்படி மேற்கொள்வது என்று விளக்கவும்.

–பழ. செல்லப்பன், காரைக்குடி

பதில்: முன்பு நீங்கள் எப்படி மற்ற வேர்ட் தொகுப்புகளில் இந்த தடையை உருவாக்கினீர்களோ, அதே போல இப்போதும் அமைக்கலாம்.

1. ரிப்பனில் "File" என்ற டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும்.

2. மைக்ரோசாப்ட் ஆ□ஸ் பேக் ஸ்டேஜ் வியூ தோன்றும். இதில் "Options" என்னும் பட்டனில் கிளிக் செய்திடவும். (அல்லது மேலே குறிப்பிட்ட 1 மற்றும் 2ல் உள்ள செயல்பாட்டிற்குப் பதிலாக Alt + T அழுத்திப் பின் எழுத்து கீ நூ அழுத்தவும்.

3. இனி, "Word Options" என்ற டயலாக் பாக்ஸ் கிடைக்கும். இடது புறம் உள்ள "Proofing" என்பதில் கிளிக் செய்திடவும்.

4. வலதுபுறம் உள்ள பிரிவில் "AutoCorrect options" என்பதன் கீழாக உள்ள "AutoCorrect options" பட்டனில் கிளிக் செய்திடவும்.

5. நிறைய டேப்கள் கொண்ட "AutoCorrect" டயலாக் பாக்ஸ் கிடைக்கும்.

6. "AutoCorrect" என்ற டேப்பில் கிளிக் செய்திடவும்.

7. இதில் "Capitalize first letter of sentences" என்ற வரியின் முன் உள்ள செக் பாக்ஸில் ஏற்கனவே உள்ள டிக் அடையாளத்தின் மீது கிளிக் செய்து, அதனை நீக்கவும். பின்னர் கிடைக்கும் அனைத்து ஓகே பட்டன்களிலும் கிளிக் செய்து வெளியேறவும்.

இனி, மீண்டும் வேர்ட் 2010 திறந்து இயக்குகையில், உங்கள் டெக்னிக்கல் டாகுமெண்ட் மட்டுமின்றி, வேறு எந்த டாகுமெண்ட்டிலும், வேர்ட் தானாக, வாக்கியத்தின் முதல் எழுத்தினைக் கேப்பிடல் எழுத்தாக மாற்றி அமைக்காது.

கேள்வி: என் கம்ப்யூட்டரை நான் இல்லாதபோது வேறு யாரேனும் பயன்படுத்தி இருக்கிறார்களா என்பதை எப்படி அறிவது?

– என். லஷ்மி பிரபா, மதுரை

பதில்: நல்ல கேள்வி. பலரின் மனதில் அரித்துக் கொண்டிருக்கும் சந்தேகம் நீக்கும் கேள்வி. அலுவலகங்களில், வீடுகளில் நம் பயன்பாட்டிற்கென உள்ள கம்ப்யூட்டர்களை, நாம் அங்கு இல்லாத போது, மற்றவர் பயன்படுத்தும் நிகழ்வுகள் நிச்சயம் ஏற்படலாம். இதனை எப்படி அறிவது? இதற்கு விண்டோஸ் இயக்கத்தில் வழி தரப்பட்டுள்ளது. இதனை நமக்குக் காட்டும் வசதியின் பெயர் Event Viewer ஆகும். எக்ஸ்பி முதல் இன்றைய விண்டோஸ் 7 வரை இது தரப்பட்டுள்ளது. எக்ஸ்பியில் ஸ்டார்ட், ரன் அழுத்தி, eventvwr.msc என டைப் செய்திடவும். விஸ்டாவிலும், விண்டோஸ் 7லும், சர்ச் பாக்ஸில் டைப் செய்திடவும். உடன், எப்போது எந்த நேரத்தில் கம்ப்யூட்டர் பயன்படுத்தப்பட்டது என்ற தகவல்கள் காட்டப்படும். இதில் முதலில் தரப்படும் விஷயங்கள் நமக்குப் புரியாது. இறுதியாகப் பயன்படுத்தியவர் பெயர், கம்ப்யூட்டர் பெயர் காட்டப்படும். அதனைக் கொண்டு அறிந்து

கொள்ளலாம்.

விண்டோஸ் எக்ஸ்பி, கம்ப்யூட்டரில் நடக்கும் நிகழ்வுகளை, Application, Security, மற்றும் System என மூன்று லாக் பைல்களில் அமைத்து வைத்துக் கொள்கிறது. விஸ்டாவில் இவை அனைத்தும் Windows Logs என்ற பிரிவில் வைக்கப்படுகின்றன. விண்டோஸ் 7 சிஸ்டம் Setup மற்றும் Forwarded Events எனவும் இவற்றைக் கொள்கிறது.

உங்களுடைய நோக்கத்திற்கு System log என்பதுதான் தேவை. இடது புறம் உள்ள System என்பதில் கிளிக் செய்தால், கம்ப்யூட்டரில் ஏற்பட்ட நிகழ்வுகளின் பட்டியல் கிடைக்கும். இங்கு நீங்கள் கம்ப்யூட்டரை விட்டு நகன்ற தேதி, நேரம் அடிப்படையில் உள்ள நிகழ்வுகளைக் கண்டு, யார் பயன்படுத்தி இருப்பார்கள் எனப் பார்க்கலாம். அத்துடன் யார் அதிக நேரம் பயன்படுத்தினார்கள் என்றும் கவனிக்கலாம்.

கேள்வி: என் கம்ப்யூட்டரில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரைப் பயன்படுத்தி வருகிறேன். வெப்சைட்டுக்கான பெயர் டைப் செய்கையில், ஒவ்வொரு எழுத்திற்கும், ஒரு குரூப் வெப்சைட் பெயர் கிடைக்கும். இப்போது முழுவதும் டைப் செய்த பின்னரே, தளம் கிடைக்கிறது. இதற்கென்ன காரணம்? மீண்டும் எப்படி பழைய முறையில் இணைய தளப் பெயர்களைப் பெறலாம்?

–டி. காமராஜ் கார்த்தி, சிவகாசி

பதில்: உங்கள் பிரவுசரில் ஆட்டோ கம்ப்ளீட் (Auto Complete) என்ற வசதி எப்படியோ நிறுத்தப் பட்டுள்ளது என்று நினைக்கிறேன். இந்த வசதிதான், நீங்கள் அட்ரஸ் பாரில், இணைய தள முகவரியினை டைப் செய்கையில், எழுத்துக்களை வாங்கிக் கொண்டு தன் நினைவகத்தில் உள்ள, நீங்கள் ஏற்கனவே பார்த்த இணைய தள முகவரிகளுடன் ஒப்பிட்டு, இணையாக உள்ளவற்றைப் பட்டியலிடுகிறது. இந்த வசதியினை மீண்டும் எப்படி ஏற்படுத்துவது என்று பார்ப்போம்.



மேலாக, பிரவுசரின் வலது மூலையில் உள்ள Tools என்பதில் கிளிக் செய்திடவும். பின் அங்கிருந்து, Internet Options என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு கிடைக்கும் விண்டோவில் உள்ள டேப்களில், Content என்னும் டேப்பில் கிளிக் செய்திடவும். இங்கு Auto Complete என்னும் பிரேம் கிடைக்கும். இதில் Settings என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு Use Auto complete for என்று தலைப்பிட்டு, கீழாக இணைய முகவரி, படிவம், யூசர் பெயர் ஆகிய பிரிவுகள் இருக்கும். எந்த வகைகளில் உங்களுக்கு ஆட்டோ கம்ப்ளீட் வசதி வேண்டுமோ, அவற்றைத் தேர்ந்தெடுத்து அமைத்து வெளியேறவும். மீண்டும் இன்டர்நெட் எக்ஸ்புளோரரைத் திறந்து இயக்கினால், நீங்கள் இணைய தள முகவரிகளை அமைக்கையில், முன்பு அமைத்த தள முகவரிகள் பட்டியலாகக் காட்டப்படும். அதிலிருந்து உங்களுக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

கேள்வி: பயர்பாக்ஸ் பிரவுசரைத் திறக்கும்போது, ஹோம் பேஜ் வெப்சைட்டுக்குப் பதிலாக, நான் இறுதியாகப் பார்த்த வெப்சைட் திறக்கப்பட வேண்டும். இதற்கு என்ன செட்டிங்ஸ் மேற்கொள்ள வேண்டும்.

–சி. சம்பந்த மூர்த்தி, திண்டுக்கல்

பதில்: உங்கள் கேள்வியைப் படித்தவுடன் ஆஹா! இது ஒரு அருமையான ஏற்பாடே என்று வியக்கத் தோன்றியது. உங்கள் கேள்விக்கு நன்றி.

பயர்பாக்ஸ் பிரவுசர் திறக்கும்போது, மூன்று விஷயங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. உங்களுடைய ஹோம் பேஜ், காலியாக இருக்கும் தளம் அல்லது இறுதியாக மூடுகையில் இருந்த தளம் கொண்ட ஒரு டேப் (அல்லது டேப்கள்). இது எப்படி என்று பார்ப்போம்.

உங்கள் பிரவுசரின் மேல் பகுதிக்குச்

செல்லுங்கள்.

திரையின் குறுக்கே செல்லும் பட்டையில் பைல், எடிட் எனப் பல மெனுக்களுக்கான தலைப்புகள் உள்ளனவா! இதில் Tools என்பதில் கிளிக் செய்திடவும். கீழ் விரி பட்டியலில் Options என்பதில் கிளிக் செய்க. இங்கு ஒரு பாக்ஸ் பாப் அப் ஆகும். இதில் குறுக்காக, ஏழு டேப்கள் கிடைக்கும். முதலில் உள்ள General என்ற டேப்பில் கிளிக்கிடவும். கீழாக When Firefox starts என்று இருக்கும் இடம் வரை செல்லவும். மேலும் கீழுமாக உள்ள அம்புக் குறிகளில் ஒன்றில் கிளிக் செய்திடவும். இதில் மூன்று ஆப்ஷன்ஸ் கிடைக்கும். இவற்றில் Show my windows and tabs from last time என்பதைத் தேர்ந்தெடுக்கவும். அதன்பின் ஓகே கிளிக் செய்திடவும். அவ்வளவுதாங்க! அடுத்த முறை நீங்கள் பயர்பாக்ஸ் பிரவுசர் திறக்கையில், மூடும்போது இருந்த தளம் அல்லது தளங்களுடன் பயர்பாக்ஸ் உங்களை வரவேற்கும். மறந்துறாதீங்க! உங்க கம்ப்யூட்டர் இணைய இணைப்பில் இருக்க வேண்டும். இதைச் சொல்ல வாய்ப்பளித்தற்கு நன்றி.

கேள்வி: சீனாவில் மொபைல் போன்களில் ஒரு வைரஸ் பரவி, இன்னும் கண்டறியப்படாமல் உள்ளது எனக் கேள்விப் பட்டேன். இது இந்தியாவிற்கும் வருமா?

–இராச. இளங்கோவன், கோவை

பதில்: ஏறத்தாழ பத்து லட்சம் மொபைல் போன்களுக்கு மேல் ஒருவித வைரஸ் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளதாக, ஷாங்காய் டெய்லி என்னும் சீன நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், இதே போன்ற ஒரு மால்வேர் வைரஸ் ரஷ்யாவில் மொபைல் போன்களைத் தாக்கியது. ஏறத்தாழ அதே போன்ற தாக்குதலை, இந்த வைரஸ் சீனாவில் ஏற்படுத்தியுள்ளது.

போனில் போலியான ஒரு ஆண்ட்டி வைரஸ் புரோகிராமிற்கான லிங்க் தரப்படுகிறது. இதில் கிளிக் செய்தவுடன், வைரஸ் போனில் செயல்பட்டு, சிம் குறித்த தனிநபர் தகவல்களை, ஹேக்கர்களின் சர்வருக்கு அனுப்புகிறது. இந்த தகவல்கள் கிடைத்தவுடன், அதில் உள்ள அட்ரஸ் புக்கில் உள்ள முகவரிகளுக்கு, பணம் பறிக்கும் வகையிலான எஸ்.எம்.எஸ். செய்திகள் அனுப்பப்படுகின்றன. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 2 கோடி யுவான் சீனப் பணம் ஹேக்கர்களின் வெப்சைட்டுக்குச் செல்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. சீன அரசு இந்த வைரஸ் எங்கிருந்து வருகிறது என்பதை அறிய படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அனைத்து முயற்சிகளையும் இந்த வைரஸ் ஏமாற்றிக் கொண்டு பணம் சம்பாதித்துக் கொண்டுள்ளது.

அடுத்த படியாக அதிகம் மொபைல் பயன்படுத்தும் நம் நாட்டிற்கும் இது வரலாம் என அஞ்சப்படுகிறது.